[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 மார்ச் 23

மற்றுமொரு வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

47. 2002-2003ஆம் ஆண்டில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் துவக்கப்பட்ட சுய நிதி பாடப்பிரிவுகள் அனைத்தும் இவ்வரசால் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியினைத் தொடர வழிவகுக்கும் முறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டு, அரசுக் கல்லூரிகளில் உயர் கல்வி இலவசமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

48. 2006-2007 ஆம் ஆண்டில், 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்றுமுறை (Shift system) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் சுய நிதிக் கல்லூரிகளில் அதிகக் கல்விக் கட்டணம் செலுத்தி உயர் கல்வியினைத் தொடர இயலாத மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் இந்த மாற்றுமுறையின் வாயிலாகப் பயனடைந்துள்ளனர். மாற்றுமுறை அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டில் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் மாற்றுமுறை துவக்கப்படும். இதனால் அரசுக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 30,000-லிருந்து 60,000 ஆக உயரும். மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 500 கூடுதல் வகுப்பறைகள் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

49. பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் மூலமாக உருவாகும் வேலைவாய்ப்புகளை அப்பகுதி இளைஞர்கள் பெற்றுப் பயனடையும் வகையில் அம்மாவட்டத்தில் இரண்டு புதிய தொழிற்பயிற்சி நிலையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையமும் வரும் ஆண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

50. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ஒரு துறையைத் தேர்வு செய்து அவற்றைச் சிறப்புத் தகுதி மையங்களாக (Centres of Excellence) மேம்படுத்துவதற்கு வசைசெய்யப்படும். இதன் முதற்கட்டமாக, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.